பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 02 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மத்தியப்பிரதேசத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

2. இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

4. எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி தமிழக மீனவர்கள் 18 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் அயர்லாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று மத்தியப்பிரதேசம் செல்கிறார்.

அம்மாநிலத்தில் சத்தார்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பாஹேஸ்வர்தாமில் 218 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

10 ஹெக்டேர் பரப்பளவில் அமையும் இந்த மருத்துவமனையில் முதற்கட்டமாக 100 படுக்கை வசதி கொண்ட அதிநவீன புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்பட உள்ளது.

பின்னர் போபாலில் அம்மாநில பிஜேபி நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

நாளை காலை அவர் போபாலில் உலக முதலீட்டாளர் மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அங்கிருந்து பீஹார் செல்லும் பிரதமர், பாகல்பூரில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 19வது தவணையை விடுவிக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து அசாம் செல்லும் திரு. நரேந்திர மோடி குவஹாத்தியில் அம்மாநில தேயிலைத் தொழில்துறையின் 200வது ஆண்டு விழாவிலும் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாடு முழுவதும் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞசல் செய்யும்,

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

மாணவர்கள் தங்களது முழு திறமையையும் வெளிப்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பாபாசாகேப் அம்பேத்கர் மரத்வாடா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டின் பல்வேறு துறைகளிலும் இளைஞர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாகக் கூறினார்.

பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக நாடு அபார வளர்ச்சி பெற்றிருப்பதாக குறிப்பிட்ட அவர், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்றார்.

உலகில் நடைபெறும் பொருளாதார பரிவர்த்தனைகளில் 15 சதவீதம் இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதுடன் டிஜிட்டல் இணைப்பு, புத்தொழில் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தில்லி பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி இம்மாதம் மேற்கொண்ட அமெரிக்கப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்றார்.

பிரதமரும், அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பும் தேசியவாதிகளாக திகழ்வதுடன் இரு தலைவர்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் அவரவர் நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

உலக அரங்கில் இந்தியாவின் எழுச்சி, நாட்டு மக்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் அக்னூர் பகுதியில் தனியார் மருத்துவமனை ஒன்றை திறந்து வைத்துப் பேசிய அவர், நாட்டின் தொலைதூரப் பகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவைகள் கிடைக்கச் செய்ய பெரிய மற்றும் சிறிய மருத்துவமனைகள் இடையேயான கூட்டு முயற்சிகளை அரசு ஊக்குவித்து வருவதாகக் கூறினார்.

தற்போதுள்ள மருத்துவமனைகள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது மட்டுமின்றி மக்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்காகவும் பணியாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத், நோயாளிகள் மற்றும் மருத்துவமனைகள் ஆகிய இரு தரப்பினருக்கும் பயனளிப்பதாகவும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்று ஒருநாளில் மட்டும் ஒரு கோடியே 43 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

தமிழக பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலையும் நேற்று கும்பமேளாவில் பங்கேற்று வழிபட்டார்.

அப்போது பேசிய அவர், உலகின் மிகப்பெரிய ஆன்மிக சங்கமமாக கருதப்படும் இந்த கும்பமேளா, நாகரிகத்தின் அடையாளமாகவும், அமைதியின் தூதுவராகவும் திகழ்கிறது என்றார்.

கும்பமேளாவை ஒட்டி பிரயாக்ராஜில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கலந்துகொள்கிறார்.

வரும் புதன்கிழமையுடன் கும்பமேளா நிறைவடைய உள்ள நிலையில், கடைசி நாளான சிவராத்திரி தினத்தன்று ஏராளமான பக்தர்கள் வரக்கூடும் என்பதால் கூடுதல் ரயில்கள் மற்றும் விமானங்கள் இயக்கப்படுவதுடன் பிரயாக்ராஜில் போக்குவரத்து மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 60 கோடியே 60 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கும்பமேளாவில் புனித நீராடி இருப்பதாகவும் உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி தமிழக மீனவர்கள் 18 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை சுற்றிவளைத்துப் பிடித்ததுடன் அவர்களது படகுகளையும் பிடித்துச் சென்றுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்குப் பிறகு மீனவர்கள் தலைமன்னார் கடற்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தில்லி சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

மூன்று நாள் நடைபெறும் இந்தக் கூட்டத்தொடரின் முதல் நாளான நாளை, புதிய உறுப்பினர்கள் பதவியேற்க உள்ளனர்.

புதிய உறுப்பினர்களுக்கு சட்டப்பேரவையின் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. அரவிந்தர் சிங் லவ்லி பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து சட்டப்பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற உள்ளது.

நாளை மறுநாள் துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா சட்டப்பேரவையில் உரையாற்றுகிறார்.

அதனைத் தொடர்ந்து முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடுகள் குறித்த தலைமைத் தணிக்கை அதிகாரியின் தணிக்கை அறிக்கை பேரவையில் தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ரஷ்யா – அமெரிக்கா இடையிலான அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை இன்னும் இரு வாரங்களுக்குள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. **Sergei Ryabkov**-ஐ மேற்கோள் காட்டி அந்நாட்டின் அரசு செய்தி நிறுவனமான **RIA** வெளியிட்டுள்ள செய்தியில், இந்தப் பேச்சுவார்த்தை மூன்றாவது நாடு ஒன்றில் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தையின்போது ரஷ்யா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாவதிக்கப்பட்டது.

மேலும் யுக்ரைன் போர் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே கொள்கை அளவில் ஒருமித்த கருத்து ஏற்பட்டதாகவும் அந்த செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

<<<<>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் நேற்று நடைபெற்ற அயர்லாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

புவனேஸ்வரில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஆசியக் கோப்பை வில்வித்தை போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் விஷ்ணு சௌத்ரி, 6-2 என்ற புள்ளிக் சக வீரர் ராகுலை வென்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் **Basanti Mahato** 6-4 என்ற புள்ளிக் கணக்கில் தைவானின் **Fong**-ஐ வென்று தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் 33 ரன் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணி வெற்றி பெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய உத்தரப்பிரதேச அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 177 ரன் எடுத்தது.

178 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி 19 புள்ளி 3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 144 ரன் மட்டுமே எடுத்தது.

<<<<>>>>

சிட்னியில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோஷல் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-9, 5-11, 11-1, 11-2 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Rhys Dowling-**ஐ வென்றார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஈஸ்ட் பெங்கால் அணி, பஞ்சாப் அணியையும், கோவா – கேரள அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மோகன் பஹான் அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**